முருகப்பெருமான் துணை

**மகான் ராகுபகவானை தொடர்ந்து**
**மகான் கேதுபகவான் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

29.06.2021, செவ்வாய்க்கிழமை

1. ஞானச்சுடரே ஆறுமுக அரங்கா
ஞானிகளை உருவாக்க வந்தநல்
ஞானக்கடலே ஞான தேசிகா
ஞாலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே யோகபிரசன்ன ஆசி
குறைவிலா பிலவ மிதுன திங்கள்
கருதியே மூவைந்துதிகதி குசன் வாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 15ம் நாள், 29.06.2021 செவ்வாய்கிழமை)
கணக்காய் கேதுபகவான் யானும்
3. யானும் ஞானயுகம் அமைய உரைப்பேன்
உயர்வுதரும் அரங்கன் வழி
ஞானமாக உலகம் ஏற்கப்பட
ஞானயுகமாற்றம் சடுதி காணும்
4. காணவே உண்மை நெறியாம்
கந்த வேலனின் சன்மார்க்கநெறி
ஞானமாக மக்களால் ஏற்கப்பட்டு
ஞானிகள் பூசை உலகமெங்கிலும் நடக்க
5. நடக்கவே உலகமெங்கிலும் இனி
ஞானவான்கள் மிகுதி தேர்வாகி
மடமைகள் அனைத்தும் விலகி
மாதவ பலனாக மாற்றமும்
6. மாற்றமுடன் நல்ல தேற்றமும்
மகான் அரங்கனால் கண்டு
ஏற்றம்தரும் ஞானத்தலைமையும்
எல்லாத்திக்கிலும் ஞான ஆட்சியும்
7. ஆட்சியும் கண்டு உலகம்
ஆறுமுகன் அருளை பெறும்
ஆட்சி வழி உலகம் பாதுகாப்புறும்
ஆபத்தான சகல இடர்களும் விலகி
8. விலகி மக்களிடை நம்பிக்கை
வினை சூழா பெருவாழ்வாய்
வளமும் ஞான பலமும் கூடி
வையகமும் நல்ல வலுப்பெறும்
9. பெருமைமிக்க அரங்கனுடன்
பிரம்ம சக்திகள் இணைந்து
கருத்தாக அருள்செய்து வர
கேதுபகவான் யானும் சூட்சும

10. சூட்சும பலமாய் உடனிருக்க
சுத்தி சித்தி முக்தி நிலைபெற
மாட்சிமைபட வேண்டிவந்துமே
மகான் தேசிகன் திருவடி பற்றியவர்

11. பற்றியவர் சோடை போகார்
பரமானந்த சூட்சுமம் விளங்கி
ஆற்றல்பட பிறவா பேறடைவர்
அருளிய யோகபிரசன்ன ஆசி முற்றே

—சுபம்—